# அறிவியல் - ஆறாம் வகுப்பு

| S. No | LO. No | LEARNING OUTCOMES |
|---|---|---|
| 1 | S601 | தோற்றம், தன்மை, பணிகள் போன்ற உற்றுநோக்கக் கூடிய மற்றும் நறுமணம் போன்ற நுகரக்கூடிய பண்புகளின் அடிப்படையில் தாவர நார்கள், மலர்கள் போன்ற **பொருள்கள் மற்றும் உயிரினங்களை இனங்காணல்** |
| 2 | S602 | பண்புகள், கட்டமைப்பு மற்றும் பணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இழை மற்றும் நூல், ஆணிவேர் மற்றும் சல்லிவேர், மின்கடத்திகள் மற்றும் மின்கடத்தாப் பொருள்கள் போன்ற **பொருள்களையும் உயிரினங்களையும் வேறுபடுத்துதல்** |
| 3 | S603 | பொருள்களைக் கரையும் பொருள்கள், கரையாப் பொருள்கள்; ஒளி ஊடுருவும், ஒளிகசியும், மற்றும் ஒளிபுகாப் பொருள்கள்; மாற்றங்களை மீள்மாற்றம் மற்றும் மீளாமாற்றம்; தாவரங்களைச் சிறு செடிகள், புதர்ச்செடிகள், மரங்கள், படர்கொடிகள், ஏறுகொடிகள்; வாழிடத்தின் உட்கூறுகளை உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகள்; இயக்கத்தினை நேரான இயக்கம், வட்ட இயக்கம், கால ஒழுங்கு இயக்கம் போன்ற உற்றுநோக்கக்கூடிய பண்புகளின் அடிப்படையில் **பொருள்கள், உயிரினங்களை வகைப்படுத்துதல்** |
| 4 | S604 | **எளிய பரிசோதனைகளை மேற்கொண்டு வினாக்களுக்கான விடைகளைக் கண்டறிதல்.** எ.கா., கால்நடைத் தீவனத்தில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள் யாவை? அனைத்து இயற்பியல் மாற்றங்களும் மீள் மாற்றங்களா ? தனித்துத் தொங்கவிடப்பட்ட காந்தம் ஒரு குறிப்பிட்ட திசையில் நிற்குமா? |
| 5 | S605 | **செயல்கள் மற்றும் நிகழ்வுகளைக் காரணங்களோடு தொடர்புபடுத்துதல்** எ.கா., ஊட்டச்சத்துக் குறைபாட்டு நோய்களை உணவுடனும், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தகவமைப்புகளை அவற்றின் வாழிடத்துடனும், காற்றின் தன்மையை மாசுப்பொருள்களுடனும் தொடர்புபடுத்துதல் |

www.kalviamuthu.com

ம.ரமேஷ் M.Sc.,M.Phil.,B.Ed. பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.

| | | |
|---|---|---|
| 6 | S606 | **செயல்கள் மற்றும் நிகழ்வுகளை விளக்குதல்.** எ.கா., தாவர நார்களைப் பதப்படுத்துதல்; தாவர மற்றும் விலங்குகளின் அசைவு மற்றும் இடப்பெயர்ச்சி; நிழல்கள் உருவாதல்; சமதள ஆடியில் ஒளி எதிரொளிப்பு; காற்றின் பகுதிப் பொருளில் உள்ள வேறுபாடுகள்; மண்புழு உரம் தயாரித்தல் போன்றவை |
| 7 | S607 | **இயற்பியல் அளவைகளை அளவிட்டு, SI அலகுகளில் தெரிவித்தல்.** எ.கா., நீளம். |
| 8 | S608 | **படங்களைப் பாகங்கள் குறித்து வரைதல் / உயிரினங்களின் செயல்பாடுகளைச் செயல் வரைபடமாக வரைதல்.** எ.கா., மலர்களின் பாகங்கள், மூட்டுகள், வடிகட்டுதல், நீர்ச்சுழற்சி போன்றவை |
| 9 | S609 | **சுற்றுப்புறத்தில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி மாதிரிகளை உருவாக்கி அவை செயல்படும் விதத்தை விவரித்தல்.** எ.கா., ஊசித்துளைக் காமிரா, பெரிஸ்கோப், மின்சார டார்ச் விளக்கு போன்றவை |
| 10 | S610 | **கற்றுக்கொண்ட அறிவியல் கருத்துக்களை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல்** எ.கா., சரிவிகித உணவிற்கு ஏற்ற உணவுகளைத் தேர்ந்தெடுத்தல்; பொருள்களைப் பிரித்தல்; பருவகாலத்திற்கு ஏற்ற ஆடைகளைத் தேர்ந்தெடுத்தல்; திசைகளை அறிய காந்த ஊசியைப் பயன்படுத்துதல்; பெருமழை மற்றும் வறட்சியை எதிர்கொள்ளும் வழிமுறைகளை எடுத்துரைத்தல். |
| 11 | S611 | **சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொள்ளல்.** எ.கா., உணவு, நீர், மின்சாரம் ஆகியவை வீணாவதையும் கழிவுப் பொருள்கள் உருவாதலையும் குறைத்தல்; மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புதல்; தாவரங்களைப் பராமரித்தல் போன்றவை |
| 12 | S612 | கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி வடிவமைத்தல், திட்டமிடுதல் போன்றவற்றில் **படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்** |
| 13 | S613 | நேர்மை, புறவயத்தன்மை, ஒத்துழைப்பு, பயம் மற்றும் பாரபட்சம் கொள்ளாது இருத்தல் போன்ற **விழுமங்களை வெளிப்படுத்துதல்** |

ம.ரமேஷ் M.Sc.,M.Phil.,B.Ed. பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.

# அறிவியல் - ஏழாம் வகுப்பு

| S. No | LO. No | LEARNING OUTCOMES |
|---|---|---|
| 1 | S701 | தோற்றம், தன்மை, பணிகள் போன்ற உற்றுநோக்கக்கூடிய பண்புகளின் அடிப்படையில் தாவர நார்கள், பற்களின் வகைகள், ஆடிகள் மற்றும் லென்சுகள் போன்ற **பொருள்கள் மற்றும் உயிரினங்களைஇனங்காணல்.** |
| 2 | S702 | பல்வேறு உயிரினங்களில் செரித்தல்; ஒரு பால் இரு பால் மலர்கள்; வெப்பக் கடத்திகள் மற்றும் கடத்தாப் பொருள்கள்; அமில, கார மற்றும் நடுநிலைத் தன்மையுடைய பொருள்கள்; ஆடிகள் மற்றும் லென்சுகளால் உருவாக்கப்படும் பிம்பங்கள் போன்றவற்றின் பண்புகள், அமைப்பு மற்றும் செயல்கள் அடிப்படையில் **பொருள்களையும்உயிரினங்களையும்வேறுபடுத்துதல்.** |
| 3 | S703 | பண்புகள் / குணங்களின் அடிப்படையில் **பொருள்களையும் உயிரினங்களையும் வகைப்படுத்துதல்** எ.கா., தாவர மற்றும் விலங்கு இழைகள்; இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள். |
| 4 | S704 | **எளிய பரிசோதனைகளை மேற்கொண்டு வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிதல்.** எ.கா., வண்ண மலர்களின் சாற்றினை அமில-கார நிறங்காட்டியாகப் பயன்படுத்த முடியுமா? பச்சை நிறத்தில் இல்லாத இலைகளும் ஒளிச்சேர்க்கை செய்கின்றனவா? வெள்ளொளி பல்வேறு நிறங்களின் சேர்க்கையா? |
| 5 | S705 | **செயல்கள் மற்றும் நிகழ்வுகளைக் காரணங்களோடு தொடர்புபடுத்துதல்** எ.கா., காற்றழுத்தத்துடன் காற்றின் வேகம்; மண் வகைகளும் அவற்றில் வளரும் பயிர்களும்; மனிதர் செயல்பாடுகளும்நிலத்தடி நீர்மட்டம் குறைதலும் போன்றவை |
| 6 | S706 | **செயல்கள் மற்றும் நிகழ்வுகளை விளக்குதல்** எ.கா., விலங்குகளின் நார்களைப் பதப்படுத்துதல்; வெப்பம் கடத்தப்படும் முறைகள்; மனிதன் மற்றும் தாவரங்களின் உறுப்புக்களும் உறுப்பு மண்டலங்களும்; மின்னோட்டத்தின்வெப்ப, காந்த விளைவுகள்போன்றவை |

www.kalviamuthu.com

ம.ரமேஷ் M.Sc.,M.Phil.,B.Ed. பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.

| | | |
|---|---|---|
| 7 | S707 | **வேதி வினைகளுக்கான சொற்சமன்பாடுகளை எழுதுதல்.** எ.கா., அமில-கார வினைகள்; அரித்தல்; ஒளிச்சேர்க்கை; சுவாசித்தல் போன்றவை |
| 8 | S708 | வெப்ப நிலை, நாடித்துடிப்பு நகரும் பொருள்களின் வேகம், தனி ஊசலின் அலைவு நேரம் போன்றவற்றை **அளந்து கணக்கீடு செய்தல்.** |
| 9 | S709 | **பாகங்களுடன் படங்கள் / செயல் வரைபடங்கள் வரைதல்.** எ.கா., மனிதன், தாவரங்களின் உறுப்பு மண்டலங்கள்; மின்சுற்றுகள்; பரிசோதனை வடிவமைப்புகள்; பட்டுப்பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சி போன்றவை |
| 10 | S710 | **வரைபடங்களில் குறித்தல் மற்றும் விளக்குதல்.** எ.கா., தொலைவு நேரம் - வரைபடம் |
| 11 | S711 | **சுற்றுப்புறத்தில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி மாதிரிகளை உருவாக்கி அவை செயல்படும் விதத்தை விவரித்தல்.** எ.கா., இதயத்துடிப்பளவி (stethoscope); காற்றழுத்தமானி மின் காந்தங்கள்; நியூட்டனின் வண்ண வட்டு போன்றவை. |
| 12 | S712 | அறிவியல் கண்டுபிடிப்புகளின் கதைகள் குறித்துக் **கலந்துரையாடல் மற்றும் போற்றுதல்.** |
| 13 | S713 | **கற்றுக்கொண்ட அறிவியல் கருத்துகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல்** எ.கா., அமிலத் தன்மையைக் கையாளுதல்: மண்ணைப் பரிசோதனை செய்து வளப்படுத்துதல்; மண் அரிப்பைத் தடுக்கும் வழிமுறைகளைக் கையாளுதல்; உடல் இனப்பெருக்கம் வாயிலாகச் சாகுபடி செய்தல்; இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்கலங்களைச் சரியான வரிசையில் கருவிகளுடன் இணைத்தல்; பேரிடர்களின் போதும் அவற்றிற்குப் பிறகும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; மாசுற்ற நீரை மறு சுழற்சி செய்வதற்கான முறைகளைப் பரிந்துரைத்தல் போன்றவை |
| 14 | S714 | **சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொள்ளல்.** எ.கா., பொது இடங்களில் சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான சிறந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்தல்; மாசுப் பொருள்களின் உருவாக்கத்தினைக் குறைத்தல்; மண் அரிப்பைத் தடுக்க மரம் வளர்த்தல்; இயற்கை வளங்களின் அளவிற்கதிகமான பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகளை மற்றவர்களுக்கு உணர்த்துதல் போன்றவை |

www.kalviamuthu.com

ம.ரமேஷ் M.Sc.,M.Phil.,B.Ed. பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.

| | | |
|---|---|---|
| 15 | S715 | கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி வடிவமைத்தல், திட்டமிடுதல் போன்றவற்றில் **படைப்பாற்றலைவெளிப்படுத்துதல்** |
| 16 | S716 | நேர்மை, புறவயத்தன்மை, ஒத்துழைப்பு, பயம் மற்றும் பாரபட்சம் கொள்ளாது இருத்தல் போன்ற **விழுமங்களைவெளிப்படுத்துதல்** |

## அறிவியல் - எட்டாம் வகுப்பு

| S. No | LO. No | LEARNING OUTCOMES |
|---|---|---|
| 1 | S801 | இயற்கை மற்றும் செயற்கை இழைகள்; தொடுவிசை மற்றும் தொடாவிசைகள்; மின்கடத்தி மற்றும் மின்காப்புத் திரவங்கள்; தாவர மற்றும் விலங்கு செல்கள்; குட்டி ஈனும் மற்றும் முட்டையிடும் விலங்குகள், போன்ற உயிரினங்களையும்பொருள்களையும்அவற்றின் பண்புகள், அமைப்பு மற்றும் செயல்களின்அடிப்படையில் **வேறுபடுத்துதல்** |
| 2 | S802 | பண்புகள் / குணங்களின் அடிப்படையில் **பொருள்களையும் உயிரினங்களையும் வகைப்படுத்துதல்** எ.கா., உலோகங்கள் மற்றும் அலோகங்கள்; கோடைகால மற்றும் குளிர்காலப் பயிர்கள்; நன்மை பயக்கும் மற்றும் தீமைபயக்கும் நுண்ணுயிரிகள்; பால் மற்றும் பாலிலா இனப்பெருக்கம்; விண்வெளிப்பொருள்கள்; தீரக்கூடிய மற்றும் தீராத இயற்கை வளங்கள் போன்றவை |
| 3 | S803 | **எளிய சோதனைகளைச்செய்து வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிதல்.** எ.கா., எரிதலுக்குத் துணைபுரியும் சூழல்கள் யாவை? ஊறுகாய் மற்றும் மிட்டாய்களில் உப்பு மற்றும் சர்க்கரையை நாம் ஏன் சேர்க்கிறோம்? சம ஆழத்தில் திரவங்கள்சம அழுத்தத்தைச்செலுத்துமா? |
| 4 | S804 | **செயல்கள் மற்றும் நிகழ்வுகளைக் காரணங்களோடு தொடர்புபடுத்துதல்** எ.கா., காற்றில் மாசுப்பொருள்கள் நிறைந்திருக்கும்போது புகைப்பனி உருவாதல்; அமில மழையினால் நினைவுச் சின்னங்கள்பாழ்படுதல் போன்றவை |

www.kalviamuthu.com

ம.ரமேஷ் M.Sc.,M.Phil.,B.Ed. பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.

| | | |
|---|---|---|
| 5 | S805 | செயல்கள் மற்றும் நிகழ்வுகளை விளக்குதல். எ.கா., மனிதன் மற்றும் விலங்குகளின் இனப்பெருக்கம்; ஒலி உருவாதலும் பரவுதலும்; மின்னோட்டத்தின் வேதி விளைவுகள்; பன்முகப் பிம்பங்கள்உருவாக்கம்; தீச்சுடரின் அமைப்புபோன்றவை |
| 6 | S806 | வேதிவினைகளுக்கான சொற்சமன்பாடுகளை எழுதுதல். எ.கா., உலோகங்கள் மற்றும் அலோகங்கள்காற்று, நீர் மற்றும் அமிலங்களுடன்வினைபுரிதல்போன்றவை |
| 7 | S807 | படுகோணம், விலகுகோணம்போன்றவற்றைஅளத்தல். |
| 8 | S808 | நுண்ணுயிரிகள், வெங்காயத்தோல், மனிதர்களின் வாய்க்குழி செல்கள் போன்றவற்றின் நழுவம் தயாரித்து அவற்றின் நுண்பண்புகளைவிளக்குதல். |
| 9 | S809 | பாகங்களுடன்படங்கள் / செயல் வரைபடங்கள்வரைதல். எ.கா., செல், கண், மனித இனப்பெருக்க உறுப்புகள்; பரிசோதனைவடிவமைப்புகள்போன்றவை |
| 10 | S810 | சுற்றுப்புறத்தில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி மாதிரிகளை உருவாக்கி அவை செயல்படும் விதத்தை விவரித்தல். எ.கா., ஒற்றைக் கம்பி இசைக்கருவி (தம்புரா), நிலை மின்காட்டி (எலக்ட்ராஸ்கோப்), தீயணைப்பான் போன்றவை |
| 11 | S811 | கற்றுக்கொண்ட அறிவியல் கருத்துக்களை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல். எ.கா., நீர் சுத்திகரித்தல்; மட்கும் மற்றும் மட்காக் கழிவுகளைப் பிரித்தெடுத்தல்; பயிர்ப்பெருக்க முறைகளைக் கையாளுதல்; பல்வேறு பயன்பாடுகளுக்கு ஏற்ற உலோகங்கள் மற்றும் அலோகங்களைப் பயன்படுத்துதல்; உராய்வை அதிகப்படுத்துதல் / குறைத்தல்; வளரிளம் பருவம் சார்ந்த தொன்மங்கள் மற்றும் சமூகப் பழக்கவழக்கங்களைசவால்களாகஎதிர்கொள்ளல்போன்றவை |
| 12 | S812 | அறிவியல் கண்டுபிடிப்புகளின்கதைகள் குறித்துக் கலந்துரையாடல்மற்றும் போற்றுதல். |
| 13 | S813 | சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொள்ளல். எ.கா., வளங்களை எத் தேவையான அளவில் பயன்படுத்துதல்; உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துதல்; சுற்றுச்சூழல் இன்னல்களை எதிர்கொள்ளும் வழிமுறைகளைப் பரிந்துரைத்தல் போன்றவை |

www.kalviamuthu.com

ம.ரமேஷ் M.Sc.,M.Phil.,B.Ed. பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.

| | | |
|---|---|---|
| 14 | S814 | கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி வடிவமைத்தல், திட்டமிடுதல் போன்றவற்றில் **படைப்பாற்றலைவெளிப்படுத்துதல்** |
| 15 | S815 | நேர்மை, புறவயத்தன்மை, ஒத்துழைப்பு, பயம் மற்றும் பாரபட்சம் கொள்ளாது இருத்தல் போன்ற **விழுமங்களைவெளிப்படுத்துதல்** |

## 6, 7, 8 கற்றல் விளைவுகள் ஒப்பீடு

| S. No | LEARNING OUTCOMES | VI LO. No | VII LO. No | VIII LO. No |
|---|---|---|---|---|
| 1 | பொருள்கள் மற்றும் உயிரினங்களை **இனங்காணல்**(IDENTIFICATION). | **S601** | **S701** | |
| 2 | பொருள்கள் மற்றும் உயிரினங்களை **வேறுபடுத்துதல்**(DIFFERENTIATION). | **S602** | **S702** | **S801** |
| 3 | பொருள்கள் மற்றும் உயிரினங்களை **வகைப்படுத்துதல்**(CLASSIFICATION). | **S603** | **S703** | **S802** |
| 4 | எளிய பரிசோதனைகளை மேற்கொண்டு வினாக்களுக்கான விடைகளைக் கண்டறிதல். | **S604** | **S704** | **S803** |

www.kalviamuthu.com

ம.ரமேஷ் M.Sc.,M.Phil.,B.Ed. பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | செயல்கள் மற்றும் நிகழ்வுகளைக் காரணங்களோடு தொடர்புபடுத்துதல் | **S605** | **S705** | **S804** |
| 6 | செயல்கள் மற்றும் நிகழ்வுகளை விளக்குதல். | **S606** | **S706** | **S805** |
| 7 | வேதிவினைகளுக்கான சொற்சமன்பாடுகளை எழுதுதல். | | **S707** | **S806** |
| 8 | a) இயற்பியல் அளவுகளை அளவிட்டு SI அலகுகளில் தெரிவித்தல்.<br>b) அளந்து கணக்கீடு செய்தல்.<br>c) படுகோணம், விலகுகோணம் போன்றவற்றை அளத்தல். | **S607** | **S708** | **S807** |
| 9 | நுண்ணுயிரிகள், வெங்காயத்தோல், மனிதர்களின் வாய்க்குழி செல்கள், போன்றவற்றின் **நழுவம் தயாரித்து அவற்றின் நுண்பண்புகளை விளக்குதல்.** | | | **S808** |
| 10 | படங்களைப் பாகங்கள் குறித்து வரைதல் / உயிரினங்களின் செயல்பாடுகளைச் செயல் வரைபடமாக வரைதல். | **S608** | **S709** | **S809** |
| 11 | வரைபடங்களில் குறித்தல் மற்றும் விளக்குதல். | | **S710** | |
| 12 | சுற்றுப்புறத்தில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி மாதிரிகளை உருவாக்கி அவை செயல்படும் விதத்தை விவரித்தல். | **S609** | **S711** | **S810** |

www.kalviamuthu.com

ம.ரமேஷ் **M.Sc.,M.Phil.,B.Ed.** பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | அறிவியல் கண்டுபிடிப்புகளின் கதைகள் குறித்துக் கலந்துரையாடல் மற்றும் போற்றுதல். | | **S712** | **S812** |
| 14 | கற்றுக் கொண்ட அறிவியல் கருத்துக்களை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல். | **S610** | **S713** | **S811** |
| 15 | சுற்றுப் புறத்தைப் பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொள்ளல். | **S611** | **S714** | **S813** |
| 16 | கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி வடிவமைத்தல், திட்டமிடுதல் போன்றவற்றில் **படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்** | **S612** | **S715** | **S814** |
| 17 | நேர்மை, புறவயத்தன்மை, ஒத்துழைப்பு பயம் மற்றும் பாரபட்சம் கொள்ளாது இருத்தல் போன்ற **விழுமங்களை வெளிப்படுத்துதல்** | **S613** | **S716** | **S815** |

www.kalviamuthu.com

# கற்றல் விளைவுகள் பதிவேடு (மாதிரிக்காக)

ஆறாம் வகுப்பு அறிவியல் மொத்த கற்றல் விளைவுகள் : 13

பருவம் : 1 அளவீடுகள்

| S. No | LO. No | கற்றல் விளைவுகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

www.kalviamuthu.com

ம.ரமேஷ் M.Sc.,M.Phil.,B.Ed. பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), நகரவை நடுநிலைப்பள்ளி, பவானி கிழக்கு.
அலைபேசி : 9095627524.